# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் (திருத்த)ச் சட்டம்

---

*[1990 மாச்சு மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

*1990, மாச்சு மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : ரூபா 1.00*

## 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் (திருத்தச்) சட்டம்

[1990, மாச்சு மாதம் 6 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ 63/89

### 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவிலுள்ள "ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆள் ஒவ்வொருவரும் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் தவறொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அந்தப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "சொந்தகாரர்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையிலான சொற்களுக்குப்பதிலாக, "சொந்தக்காரர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இருநூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. பின்வரும் புதிய பிரிவானது, 29 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 29அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" ஆட்கள் குழுக்களினாலான தவறுகள்

29அ. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து—

(அ) அந்த ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப் பட்ட குழுவொன்றாயின் அந்தக் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளர், முகாமையாளர், அல்லது செயலாளர் என்போரும்;

(ஆ) அத்தகைய ஆட்கள் குழு குழுமம் ஒன்றாயின், அந்தக் குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அத்துடன்

(இ) அத்தகைய ஆட்கள் குழு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாயின் அத்தகைய குழுவின் உறுப் பினராகவுள்ள தனியாள் ஒவ்வொருவரும்

அந்தத் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்; ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரொருவர், முகாமையாளர் அல்லது செய லாளர், அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காள ரொருவர், தாம் அறியாமலே அத்தகைய தவறு புரியப் பட்டது, அல்லது அத்தகைய தவறு புரிகையைத் தடுப் பதற்குத் தாம் எல்லா விழிப்புக் கவனத்தையும் பிர யோகித்துள்ளார் என எண்பித்தால், அவர் அத்தகைய தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலா காது.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

6. இச்சட்டத்தின் சிங்கள தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.